# ஒட்டன்சத்திரம் நகராட்சி

1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் அட்டவணை-III விதி எண்.2(2)ன் கீழ் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டமானது 28.06.2022 (செவ்வாய் கிழமை) அன்று முற்பகல் 11.30 மணியளவில் நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெறும். அது சமயம் நகர்மன்ற துணை தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ள வேண்டுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/- க.திருமலைசாமி
நகர்மன்றத் தலைவர்
ஒட்டன்சத்திரம் நகராட்சி

நாள்.24.06.2022

**பொருள் : 1**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 1-வது வார்டு சீத்தப்பட்டி நுழைவு வாயிலில் உள்ள கழிவுநீர் வாய்க்கால் மற்றும் பாலங்கள் சிதலமடைந்தும் மற்றும் குறிஞ்சி நகர் பூங்கா மேல்புறம் உள்ள சிறுபாலம் மற்றும் 10-வது வார்டு பகுதியில் கான்கிரீட் சிலாப் முதலானவைகள் சேதமடைந்து பொதுமக்கள் பயன்படுத்த இயலாதநிலை உள்ளதால், மேற்படி பணிகளுக்காக நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.2.90 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. போக்குவரத்து / பொதுமக்களின் பயன்பாடு அவசியம் கருதி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதையும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்1691/2022/இ1)

**தீர்மான எண்.150**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 2**

திரு.ப.கனகராஜ், 7-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் கொண்டுவரப்பெற்ற பொருள்.

ஒட்டன்சத்திரம் நகராட்சி 7-வது வார்டு நாயக்கனூர் பகுதி பொதுமக்களின் குடிநீர் தேவைக்காக மேல்நிலைத் தொட்டி அமைக்க கேட்டுக்கொண்டதை தொடர்ந்து, இடம் நேராய்வு செய்யப்பட்டதில், மேற்படி பகுதியில் மேல்நிலைத் தொட்டி அமைக்கும் பணிக்கு, நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.9.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுமக்களின் நலன் மற்றும் பணியின் அவசியம் கருதி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதையும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்1374/2022/இ1)

**தீர்மான எண்.151** அனுமதிக்கப்பட்டது.

**பொருள்:3**

திரு.ப.கனகராஜ், 7-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் கொண்டுவரப்பெற்ற பொருள்.

ஒட்டன்சத்திரம் நகராட்சி 7-வது வார்டு தும்மிச்சம்பட்டி புதூர், கஸ்தூரி நகர் மற்றும் நாயக்கனூர் பொதுமக்கள் பண்டைய காலம் தொட்டு பயன்படுத்தி வந்த பழனி சாலையில் வடக்கு பகுதியில் உள்ள மயானம் சீர் செய்து சுற்றுச்சுவர் அமைத்து பராமரிக்க வேண்டி வரப்பெற்ற கோரிக்கையின்படி, மேற்படி பகுதியில் பழனி சாலையில் உள்ள மயானம் சீர் செய்து சுற்றுச்சுவர் அமைத்து பராமரிக்கும் பணிக்கு, நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.9.95 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி வார்டு பகுதி பயன்பாடு மட்டுமல்லாமல் 14 மற்றும் இதர வார்டு பொதுமக்கள் பயன்படுத்தும் மயானமாக உள்ளதால், மயான பயன்பாட்டின் அவசியம் கருதி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதையும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்1375/2022/இ1)

**தீர்மான எண்.152**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்:4**

திரு.வீ.கண்ணன், 13-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் கொண்டுவரப்பெற்ற பொருள்.

ஒட்டன்சத்திரம் நகராட்சி வார்டு எண்.13 மேட்டுப்பட்டி, தும்மிச்சம்பட்டியில் சுமார் 100-க்கும் மேற்பட்ட சலவை தொழிலாளர் குடும்பங்கள் வசித்து வருகின்றனர். மேற்படி சமூகத்தினர் தங்களது சமூகத்தில் இறப்பு நிகழ்வு ஏதும் ஏற்பட்டால், இறந்தவர்களின் உடலை புதைப்பதை மட்டுமே வழக்கமாக வைத்துள்ளனர். மேற்படி சமூகத்தை சேர்ந்தவர்கள் இதுவரை நகராட்சிக்கு சொந்தமான சின்னக்குளத்தில் இறந்தவர்களை அடக்கம் செய்து வந்தனர். தற்சமயம் மேற்படி குளத்தில் வளர்ச்சி பணிகள் நடைபெற்று வருவதால், அவர்கள் பயன்படுத்தி வந்த இடங்கள் அப்புறப்படுத்தப்பட்டுவிட்டன. இந்நிலையில் தங்களுக்கு நகராட்சி சின்னக்குளத்தின் அருகிலேயே 5 செண்ட் புறம்போக்கு நிலம் ஒதுக்கி தருமாறு கேட்டு வருகின்றனர். எனவே மேற்படி சலவை தொழிலாளர்கள் வேண்டுகோலை பரிசீலினை செய்து அச்சமூகத்திற்கு மயானத்திற்கான இடம் ஒதுக்கீடு செய்ய பரிந்துரைத்து வரப்பெற்றுள்ளது மன்ற முடிவு செய்யலாம்.

**அலுவலக குறிப்பு:**

நகரமைப்பு ஆய்வரால் இடம் நேராய்வு செய்யப்பட்டதில், அரசு விதிகளின்படி, சின்னக்குளம் பகுதியில் மயானம் அமைக்க வழிவகை இல்லாததால், மாற்று இடம் தேர்வு செய்ய மன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மான எண்.153**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 5**

ஒட்டன்சத்திரம் நகராட்சி அலுவலகம் 35 கே.வி.ஏ ஜெனரேட்டர் மற்றும் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 35 கே.வி.ஏ ஜெனரேட்டர் தேவையான பேட்டரி உபகரணங்கள் பொருத்தியமைக்கான பட்டியல் GEN SQUAD, மதுரை நிறுவனத்திடமிருந்து தொகை ரூ.15,240/- வரப்பெற்றுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.154**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 6**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் உள்ள வணிக வளாக கட்டிடம் மேல் தளத்தில் ராஜ் அட்வர்டைசிங், கோயம்புத்தூர் நிறுவனத்தால் விளம்பர பலகைகள் நிறுவிக்கொள்ளவும், பேருந்து நிலையத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதோடு, மின்விளக்கு, சுவர்களுக்கு வர்ணம் பூசுதல் மற்றும் பயணிகளுக்கான இருக்கை வசதிகள் முதலான பணிகள் தங்கள் நிறுவனம் மூலம் மேற்கொள்ள அனுமதி வேண்டி விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது. மேற்படி நிறுவனம் பேருந்து நிலையத்தில் விளம்பர பலகை அமைத்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அனுமதி வேண்டி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. பொதுமக்களின் நலன் கருதியும், சட்ட விதிகளுக்குட்பட்டும் நகராட்சியால் அவ்வபோது விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதிக்கலாம்.
2. விளம்பர விதிகள் 2003-இன்படி, விளம்பர பலகைகள் நிறுவ அனுமதிக்காக மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல் அவர்களுக்கு மேலனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.155**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 7**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பேருந்து நிலையத்தில் தட்டு மூலம் முருக்கு விற்பனை செய்யும் குத்தகை உரிமை மூன்றாண்டுகளுக்கு (2021-2022 முதல் 2023-2024 முடிய) 21.01.2022-இல் பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, மூன்றாண்டுகளுக்கு குத்தகை கோரிய திரு.து.முருகேசன், ஒட்டன்சத்திரம் குத்தகைதாரர் 2022-2023-ஆம் ஆண்டுக்கு குத்தகையினை புதுப்பிக்க தவறியதன் காரணமாக, மேற்படியாரின் வைப்புத் தொகையினை பறிமுதல் செய்து மேற்படி இனத்திற்கு ஒப்படைப்பு காலம் முதல் மூன்றாண்டுகளுக்கு (2022-2023 முதல் 2024-2025 முடிய) 06.04.2022, 19.04.2022, 27.04.2022, 13.05.2022, மற்றும் 16.06.2022 பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பொதுஏலம் யாரும் கோராத நிலையில்,

இறுதியாக 28.06.2022-ஆம் நாளில் நடைபெற்ற மறுபொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறாத நிலையில், பொதுஏலத்தில் கோரப்பட்ட விவரம் கீழ்கண்டவாறு,

| வ. எண் | பொதுஏலத்தில் கலந்துகொண்ட (திருவாளர்கள்) | ஏலக் கேள்வி விவரம் |
|---|---|---|
| 1 | திரு.ஏ.முருகானந்தம், விருப்பாட்சி, ஒட்டன்சத்திரம் | 1,73,400/- |
| 2 | திரு.வி.தனராஜ், காந்திநகர், ஒட்டன்சத்திரம் | 1,73,200/- |
| 3 | திரு.இ.அர்ஜீன், வினோபா நகர், ஒட்டன்சத்திரம் | 1,73,300/- |

மேற்காணும் இனத்திற்கு ஐந்து அழைப்புகளில் பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பொது ஏலம் கோர யாரும் முன்வராத நிலையில், 28.06.2022-ஆம் நாளில் நடைபெற்ற மறுபொதுஏலத்தில் கோரப்பட்ட உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியாக வரிசை எண்.1-இல் உள்ள திரு.ஏ.முருகானந்தம், விருப்பாட்சி ஏலதாரரால் கோரப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.

**அலுவலக குறிப்பு:-**

மேற்படி இனத்திற்கு ஐந்து அழைப்புகள் பொதுஏலம் /ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பொது ஏலம் கோர யாரும் முன்வராத நிலையில், 28.06.2022-ஆம் நாளில் நடைபெற்ற மறுபொதுஏலத்தில் கோரப்பட்ட உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியினை நகராட்சியின் வருவாயினை கருதி மன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மான எண்.156**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 8**

அரசு கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அவர்களின் சிறப்பாய்வு கூட்டம் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20789/2021/யு.பி.ஏ-1, நாள்.04.07.2022-இன்படி, மாண்புமிகு.பாரத பிரதமரின் (PM SVANidhi) சாலையோர வியாபாரிகளுக்கு கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் சாலையோர வியாபாரிகளுக்கு கடன் பெறும் பொருட்டு, வங்கிகளில் கணினி மூலம் (Online)-இல் பதிவேற்றம் செய்யப்பட்டு வங்கிகளால் நிராகரிக்கப்பட்டுள்ள மனுவினை மீண்டும் பதிவேற்றம் செய்து பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு கடன் வழங்கிட அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் 06.07.2022 முதல் 15.07.2022-க்குள் வங்கி மேலாளர்களை வைத்து முகாம் நடத்தி கடன் வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிகளை செய்திட ஏதுவாக வங்கி மோலாளர்களுக்கு அழைத்து முகாம் நடத்திடவும், வியாபாரிகள் அறியும் வண்ணம் ஆட்டோ விளம்பரம், விளம்பர பிளக்ஸ் வைத்திடவும், சாமியான பந்தல் மற்றும் சேர் வைத்திட ஏற்பாடுகள் செய்யும் பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினத் தொகை ரூ.50,000/- மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பாரத பிரதமரின் (PM SVANidhi) சாலையோர வியாபாரிகளுக்கு கடன் வழங்கும் திட்டம் என்பதால் உடன் செயல்படுத்திடவும், சாலையோர வியாபாரிகள் நலன் கருதி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.157**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 9**

ஒட்டன்சத்திரம் நகராட்சி சின்னக்குளத்தில் படர்ந்துள்ள ஆகாய தாமரை செடிகளை அப்புறப்படுத்தி சுத்தம் செய்யும் பணிக்கு தொகை ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 28.06.2022-இல் நகர்மன்ற தீர்மான எண்.136-இல் ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்காக 12.07.2022-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு,

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.பி.வேலுச்சாமி | 0.04 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு.கே.வடிவேல் | 1.08 % மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களிடமிருந்து டேவணித் தொகை வரப்பெற்ற நிலையில் , மேற்படி பணிக்கு திரு .பி.வேலுச்சாமி, ஒட்டன்சத்திரம் ஒப்பந்ததாரரின் 0.03% மதிப்பீட்டு விலை விகிதத்தில் குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசியம் கருதி, மதிப்பீட்டு விலையில் 0.03% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.பி.வேலுச்சாமி, ஒ ட்டன்சத்திரம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்தை ஏற்று, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 158** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 10**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு 14.05.2022-ஆம் நாளில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் மண்டல பொறியாளர் மதுரை ஆகியோர்களின் பணிகள் ஆய்வின்போது சின்னக்குளம் பகுதியில் அமைந்துள்ள மின்கம்பங்கள் மற்றும் மின்மாற்றி(Transformar) மாற்றியமைக்க கூறிய ஆலோசனையின் பேரில், நகராட்சிக்கு சொந்தமான சின்னக்குளத்தில் தற்போது நடைபெற்று வரும் பணிகளுக்கும் பூங்கா மற்றும் பொது நடைமேடை பயன்பாட்டின் போது பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள உயர்அழுத்த மின்கம்பம் மற்றும் மின்மாற்றி (Transformar) மாற்றியமைக்க கோரி செயற்பொறியாளர், தமிர்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், ஒட்டன்சத்திரம் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில், மேற்படி உயர்அழுத்த மின்கம்பம் மற்றும் மின்மாற்றியை மாற்றியமைக்க ஆகும் மதிப்பீட்டு தொகை கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | கணக்கு எண் | வகை | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 61955 | மின் கம்பங்கள் | 10,08,810/- |
| 2 | 61955 | மின்மாற்றி (Transformar) | 6,22,480/- |

மேற்கண்ட விவரப்படி தொகையை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு IUDM திட்டம் 2018-2019 & 2019-2020-இன் கீழ் அனுமதித்த சின்னக்குளம் அபிவிருத்தி பணிகளின் மதிப்பீட்டில் ஈடு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. சின்னக்குளம் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வரப்பெறும் நிலையில் உள்ளதால், மேற்படி மின்கம்பங்கள் மற்றும் மின்மாற்றி முதலானவைகளை மாற்றியமைக்கும் பணியின் அவசியம் கருதி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 159** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 11**

அரசாணை எண்.172, சுற்றுலா, கலை பண்பாடு மற்றும் அறநிலைய துறை, நாள்.14.07.2022 –இல் 75 வது வருட சுதந்திர திருநாள் அமுதம் பெரு விழாவினை சிறப்பாக கொண்டாடும் பொருட்டு, ஆகஸ்ட் 11 முதல் 17 ஆம் தேதி வரை சுதந்திர வாரமாக கொண்டாடவும் மற்றும் நகர் பகுதியில் உள்ள அனைத்து வீடுகளிலும் தேசிய கொடி ஏற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி 75வது சுதந்திர திருநாள் அமுதம் பெருவிழாவினை சிறப்பாக கொண்டடும் விதமாக திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் 18.07.2022 ஆம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் பொது மக்கள் அனைவரும் அறியும் வண்ணம் ஆட்டோ விளம்பரம், சுவர் விளம்பரம், துண்டு பிரசுரம் மற்றும் நகரின் முக்கிய பகுதிகளில் தட்டிகள் வைக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட அரசாணையில் தெரிவித்துள்ளவாறு, அனைத்து வீடுகளிலும் தேசிய கோடி ஏற்றும் வகையில் அனைத்து வீடுகளுக்கும் தேசிய கொடிகள் விநியோகம் செய்யவும் மற்றும் தேசிய கொடியின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களுக்கு எடுத்துரைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட அறிவுரைகளின்படி, 75 வது சுதந்திர திருநாள் அமுத பெருவிழாவினை சிறப்பாக கொண்டாடிட ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.5.00 இலட்சத்தினை அனுமதிக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. 75 வது சுதந்திர திருநாள் அமுத பெருவிழாவினை சிறப்பாக கொண்டாட வேண்டியதின் அவசர அவசியம் கருதி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.1675/2022/சி1)

**தீர்மான எண்.160**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 12**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதிகளில் 2022-2023-ஆம் ஆண்டிற்கு தினசரி சேகாரம் ஆகும் குப்பை மற்றும் கழிவுகளை தனியார் ஜெ.சி.பி இயந்திரம் மற்றும் டிப்பர் வாகனம் மூலம் அப்புறப்படுத்தும் பணிகள் நாளது தேதி வரை இந்நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நகராட்சி பகுதியில் தினசரி சேகாரம் ஆகும் குப்பை மற்றும் கழிவுகளை அன்றாடம் அப்புறப்படுத்த வேண்டியுள்ளதால், தற்போது மேற்படி பணிகளுக்கான உத்தேச செலவினத் தொகை ரூ.5.00 இலட்சத்தினை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதாரப் பணிகளின் அவசர அவசியம் கருதி, இந்நகராட்சி பகுதியில் தினசரி சேகாரம் ஆகும் குப்பை மற்றும் கழிவுகளை அன்றாடம் அப்புறப்படுத்த வேண்டியுள்ளதால். நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.442/2021/எச்1)

**தீர்மான எண்.161** அனுமதிக்கப்பட்டது.

**பொருள்:13**

ஒட்டன்சத்திரம் நகராட்சி திண்டுக்கல் பழனி சாலை விரிவாக்க பணிகள் நடைபெற்று வருகிறது. காந்தி நகர் மற்றும் கஸ்தூரி நகர் பகுதிக்கு செல்லும் பகிர்மான குழாய் 150 எம்.எம் டி.ஐ பைப்லைன் பழுதடைந்துள்ளதால், பொதுமக்களின் நலன் கருதி காந்தி நகர் மற்றும் கஸ்தூரி நகர் பகுதிக்கு செல்லும் பகிர்மான குழாய் 150 எம்.எம் டி.ஐ பைப்லைன் தேவையான (எல்போ) சப்ளை செய்யும் பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பொருள் | எண்ணம் | விஜய் எலக்ட்ரிக்கல்ஸ், ஒட்டன்சத்திரம் ரூ. | ஹச்.எம்.ஆர். கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் ரூ. | எம்.எம்.கே. கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 150 எம்.எம் டி.ஐ பைப்லைன் தேவையான (எல்போ) சப்ளை செய்தல் | 1 | 8000.00 | 6400.00 | 7500.00 |

மேற்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றதில், ஹச்.எம்.ஆர் கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் நிறுவனம் குறைவாக வரப்பெற்றது மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுமக்களின் நலன் மற்றும் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15-இன் கீழ் பணி மேற்கொண்டதை, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.162** அனுமதிக்கப்பட்டது.

**பொருள்:14**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20789/2022/யு.பி-ஏ1, நாள்.16.06.2022-இல் தெரிவித்துள்ளவாறு, இந்நகராட்சி தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (Day-NULM) 2021-2022-இன் கீழ் நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கு ஆதரவு (SUSV)-இன் கீழ் சாலையோர வியாபாரிகள் மீதான கணக்கெடுப்பு, இருமொழி அடையாள அட்டைகள் தயாரித்தல், விற்பனைச் சான்றிதழ், நகர வீதி விற்பனைத் திட்டம் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்கான விரிவான அமலாக்கத் திட்டம் போன்றவற்றின் கீழ் ஆலோசனை சேவைகள் மேற்கொள் ள, 20.06.2022-இல் நகர்மன்ற தலைவர் அவர்களால் முன்அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்காக 04.07.2022-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு,

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | M/s. Good Hope, Madurai | 4.00 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | M/s. Read Trust, Madurai | 4.00 % மதிப்பீட்டு விலையில் கூடுதல் |
| 3 | M/s. Senselmage Technologies Pvt Ltd, Chennai | 12.00 % மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

மேற்படி மூன்று நிறுவனங்களிடமிருந்து டேவணித் தொகை வரப்பெற்ற நிலையில் , மேற்படி பணிக்கு, M/s.Good Hope, Madurai நிறுவனத்தின் 4.00% மதிப்பீட்டு விலை விகிதத்தில் குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி பணிக்கு மதிப்பீட்டு விலையில் 4.00% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Good Hope, Madurai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்தை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.163** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 15**

இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் பயன்பாட்டில் உள்ள கீழ்ககாணும் வாகனங்களுக்கு தகுதி சான்று பெற வேண்டியுள்ளதால், அப்பணிக்கான கட்டணங்களை செலுத்த வேண்டியுள்ளது.

| வ.எண் | வாகன விவரம் | வாகன எண் |
|---|---|---|
| 1 | Tipper Lorry | TN 57 U 7987 |
| 2 | Tipper Lorry | TN 57 AW 2197 |
| 3 | TATA Ace | TN 57 AW 4437 |
| 4 | TATA Ace | TN 94 Z 6279 |
| 5 | TATA Ace | TN 94 Z 6305 |
| 6 | Water Tanker | TN 57 R 4390 |

மேற்கண்ட 6 வாகனங்களுக்கும், தகுதி சான்று பெற்று இயக்கிட, ஒவ்வொரு வாகனத்திற்கு செலுத்த வேண்டிய கட்டண விவரம் கீழ்க்கண்டவாறு,

| வ.எண் | கட்டண விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | பசுமை வரி கட்டணம் | 1010.00 |
| 2 | தகுதிச்சான்று கட்டணம் | 12474.00 |
| 3 | வாகன கட்டுப்பாட்டு கருவி | 5500.00 |
| 4 | வாகன கட்டுப்பாட்டு கருவி பொருத்துதல் | 500.00 |
| 5 | செலுத்திய தொகைக்கு இணையவரி சான்று கட்டணம் | 600.00 |
| 6 | மின்னும் ஸ்டிக்கர் ஒட்டுவதற்கு | 5000.00 |

மேற்படி வாகனங்களுக்கு தகுதி சான்று பெற ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.1,50,500/-ஐ இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர் அவர்களுக்கு முன்பணமாக வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார வாகன பயன்பாட்டின் அவசியம் கருதி. வாகனங்களுக்கு தகுதி சான்று பெற வேண்டியுள்ளதால். நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர் அவர்களுக்கு முன்பணமாக தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 164**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 16**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 1-வது வார்டு சீத்தப்பட்டி நுழைவு வாயிலில் உள்ள கழிவுநீர் வாய்க்கால் மற்றும் பாலங்கள் குறிஞ்சி நகர் பூங்கா மேல்புறம் உள்ள சிறுபாலம் மற்றும் 10-வது வார்டு பகுதியில் கான்கிரீட் சிலாப் அமைக்கும் பணிகளுக்கு தொகை ரூ.2.90 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 01.07.2022-இல் நகர்மன்ற தலைவர் அவர்களால் முன்அனுமுதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்காக 15.07.2022-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு,

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.எம்.முத்துக்கண்ணன் | 0.03 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு.ஹச்.முகமதுரஸ்மி | 1.60 % மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களிடமிருந்து டேவணித் தொகை வரப்பெற்ற நிலையில் , மேற்படி பணிக்கு திரு .எம்.முத்துக்கண்ணன் ஒப்பந்ததாரரின் 0.03% மதிப்பீட்டு விலை விகிதத்தில் குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசியம் கருதி, மதிப்பீட்டு விலையில் 0.03% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.முத்துக்கண்ணன் ஒப்பந்ததார ர் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்தை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.165**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 17**

ஒட்டன்சத்திரம் நகராட்சி சின்னக்குளம் மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் வளாக பகுதியில் நடப்பட்டுள்ள மரக்கன்றுகள் பராமரிக்க சொட்டு நீர் பாசன வசதி ஏற்படுத்தும் பணிக்கு தொகை ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 28.06.2022-இல் நகர்மன்ற தீர்மான எண்.142-இல் ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்காக 29.07.2022-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு,

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.ஹச்.முகமது ரஸ்மி | 0.04 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு.எம்.முத்துக்கண்ணன் | 2.02 % மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களிடமிருந்து டேவணித் தொகை வரப்பெற்ற நிலையில் , மேற்படி பணிக்கு திரு .ஹச்.முகமதுரஸ்மி ஒப்பந்ததாரரின் 0.04% மதிப்பீட்டு விலை விகிதத்தில் குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசியம் கருதி, மதிப்பீட்டு விலையில் 0.04% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஹச்.முகமது ரஸ்மி ஒப்பந்ததார ர் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்தை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.166**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 18**

இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவு டெங்கு கொசு தடுப்பு மருந்து மற்றும் புகைத் தெளிப்பு மருந்து, புகைத் தெளிப்பான் சிலிண்டர் போன்றவை இருப்பு இனங்கள் அளவு குறைவாக உள்ளதாலும், தற்போழுது மழைக்காலம் என்பதாலும் நகராட்சி பகுதியில் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, கீழ்க்கண்ட அத்தியாவசிய பொருட்கள் தேவைப்படுகிறது.

| வ.எண் | பொருட்கள் | லிட்டர் |
|---|---|---|
| 1 | அபேட் மருந்து | 100 லிட்டர் |
| 2 | டெமிபாஸ் மருந்து | 50 லிட்டர் |
| 3 | பைரித்திரம் 5% மருந்து | 200 லிட்டர் |

மேற்கண்ட மருந்து இனங்கள் கொள்முதல் செய்துகொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதாரப் பணிகளின் அவசர அவசியம் கருதி, இந்நகராட்சி பகுதியில் நோய் தொற்றுகள் பரவாமல் தடுக்கும் பொருட்டு, மேற்கண்ட பொருட்கள் கொள்முதல் செய்துகொள்ளவும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.167**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 19**

இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு, பேட்டரி வாகனம் மற்றும் தள்ளு வண்டிகளில் மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் மற்றும் இதர குப்பைகள் பெறுவதற்கு பச்சை, ஊதா, கருப்பு நிற வகையிலான பக்கெட்கள் தேவைப்படுவதால், மேற்கண்ட பக்கெட் (குப்பை டப்பாக்கள்) 300 எண்ணம் பக்கெட்கள் கொள்முதல் செய்துகொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.1.05 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதாரப் பணிகளின் அவசியம் கருதி, இந்நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகள் மேற்கொள்ள, மேற்கண்ட பொருட்கள் கொள்முதல் செய்துகொள்ளவும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.168**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 20**

இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் கிருமி நாசினி பொருட்கள் இருப்பு குறைவாக உள்ளதாலும், மழைக்காலம் என்பதாலும் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, பேருந்து நிலைய கழிப்பறை, கழிப்பிட பகுதிகள், குப்பை சேகர மையங்கள் மற்றும் பொதுக்கழிப்பிடங்கள் ஆகிய பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களை தூய்மையாக வைத்துக்கொள்ள கீழ்க்கண்ட பொருட்கள் தேவைப்படுகிறது.

| வ.எண் | பொருட்கள் | கிலோ |
|---|---|---|
| 1 | நீர்த்த சுண்ணாம்புத்தூள் | 8000 கிலோ |
| 2 | பிளிச்சிங் பவுடர் | 3000 கிலோ |

மேற்கண்ட கிருமி நாசினி பொருட்கள் கொள்முதல் செய்துகொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.2.50 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதாரப் பணிகளின் அவசர அவசியம் கருதி, இந்நகராட்சி பகுதியில் நோய் தொற்றுகள் பரவாமல் தடுக்கும் பொருட்டு மேற்கண்ட பொருட்கள் கொள்முதல் செய்து மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.169** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 21**

இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 18 வார்டு பகுதிகளிலும் பணிபுரிந்து வரும் இந்நகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு அத்தியாவசிய தளவாட பொருட்களான கீழ்க்கண்ட பொருட்கள் கையிருப்பு இல்லாததால், பொதுசுகாதார பிரிவிற்கு கீழ்க்கண்ட பொருட்கள் தேவைப்படுகிறது.

| வ.எண் | பொருட்கள் | எண்ணம் |
|---|---|---|
| 1 | கை கூட்டுமாறு | 200 |
| 2 | கால்வாய் கரண்டி | 80 |
| 3 | சிறிய மண்வெட்டி | 80 |
| 4 | வியா கருவிகள் | 20 |
| 5 | அறிவாள் | 40 |
| 6 | சிறிய கூட்டுமாறு | 100 |
| 7 | 3 பல் கொக்கி கரண்டி | 60 |
| 8 | குப்பை அகற்றும் கூடை | 60 |
| 9 | மின்னும் சட்டை | 100 |

மேற்கண்ட தளவாடப் பொருட்கள் கொள்முதல் செய்துகொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.3.80 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதாரப் பணிகளின் அவசர அவசியம் கருதி, மேற்கண்ட தளவாட பொருட்கள் கொள்முதல் செய்துகொள்ளவும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.170**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 22**

மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திண்டுக்கல் அவர்களின் ஆணை ந.க.எண்90U2AOJK/2022/TCP, நாள்.25.07.2022-இன்படி, SWP/DTCP/DINDIGUL/LAYOUT NO.06/2022 என எண்ணிடப்பட்டு, திரு.K.சரவணன், திரு.K.பாலசுப்பிரமணியன், திரு.C.துரைச்சாமி, திரு.P.தங்கராஜ், கதவு எண்.3/363, கண்ணப்பநகர், சாலைபுதூர் அஞ்சல் , ஒட்டன்சத்திரம் என்பவருக்கு சொந்தமான புல எண்.2/3A1-இல் 7969.00 ச.மீ (1.965 ஏக்கர்) பரப்பளவுள்ள இடத்திற்கு குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கியுள்ளதை தொடர்ந்து, மேற்படி உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ள புன்செய் விவசாய பகுதியில் இருந்து குடியிருப்பு மனைப்பிரிவாக அபிவிருத்தி மாற்ற நில உபயோகமாற்ற பயன்பாட்டுக் கட்டணம் 7969.00 ச.மீ இடத்திற்கு அரசு வழிகாட்டு தொகை பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்படி ஒப்புதல் வழங்கப்பட்ட புல எண்ணில் அனுமதிக்கப்பட்ட 21 மனைப்பிரிவுகளுக்கு வரப்பெற்ற ஒப்புதல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் லிமிடெட், திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம் அவர்களுக்கு மின் கம்பம் அமைக்க மனுதாரரால் மின்வாரியத்திற்கு தொகை ரூ.64,935/- செலுத்திய ரசீது எண்.MDD261AR2D196, நாள்.02.08.2022-இல் செலுத்தப்பட்டுள்ளது.
2. புன்செய் விவசாய பகுதியில் இருந்து குடியிருப்பு மனைப்பிரிவக அபிவிருத்தி மாற்ற நில உபயோகமாற்ற பயன்பாட்டுக்கான 3 சதவீதக் கட்டணம் தொகை ரூ.12,000/- அரசு தலைப்பில் நாள்.26.07.2022-இன்படி, செலுத்தப்பட்டுள்ளது.

3. மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் (காலி நிலத்தை தெருக்களாகவும் வீட்டு மனைகளாகவும் பிரித்து அங்கீகாரம் பெற) கட்டணம் தொகை ரூ.50,000/- நாள்.26.07.2022 நகராட்சிகளின் சட்டம் பிரிவு 175 முதல் 179-இன்படி வரவாக்கப்பட்டுள்ளது.
4. பொது ஒதுக்கீடு நீங்கலாக மனைப்பிரிவில் சாலை இடம் (மூலை முடக்குகள் உட்பட) 2653.65 ச.மீ மற்றும் 29.63 ச.மீ நகராட்சி உபயோக இடமும் தானப்பத்திரம் எண்.2475/2022, நாள்.19.07.2022-இல் ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு தான ஒப்படைப்பு ஆவணம் பெறப்பட்டுள்ளது. மேற்காணும் மனைப்பிரிவு தொடர்பாக நகரமைப்பு ஆய்வர் அறிக்கையின்படி , நகர்மன்ற தலைவர் அவர்களால் முன்அனுமதி பெற்று இறுதி ஒப்புதல் வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மான எண்.171</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்</u>: 23**

இந்நகராட்சி 11-வது வார்டு பூஞ்சோலை பகுதி தெருவில் சிமெண்ட் சாலை சேதமடைந்து பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து பயன்படுத்த இயலாத நிலையுள்ள சாலையினை புதியதாக பேவர் பிளாக் சாலை அமைக்கவும், 16-வது வார்டு மினி பவர் பம்ப் லைன்கள் உடைந்து தண்ணீர் விநியோகம் செய்ய இயலாத நிலையிலுள்ள பைப்லைன்களை மாற்றியமைத்தல் முதலான பணிகள் மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.7.70 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுமக்களின் நலன் மற்றும் மேற்படி பணிகளின் அவசியம் கருதி, பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்.172</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்</u>: 24**

ஒட்டன்சத்திரம் நகராட்சி வார்டு எண்.1, 12 மற்றும் 18 ஆகிய வார்டுகளில் சாலை மற்றும் குடியிருப்பு விரிவாக்கம் சாலைகள் அபிருத்தி பணிகள் மேற்கொண்டதன் காரணமாக ஏற்படுத்தப்பட்ட புதிய வழித்தடங்களில் கீழ்க்காணும் இடங்களில் புதியதாக மின்கம்பங்களுடன் தெருமின் விளக்கு வசதி ஏற்படுத்த நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.5.50 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

| | |
|---|---|
| 1 | தாராபுரம் சாலை முதல் குறிஞ்சிநகர் இணைப்பு சாலை வரை |
| 2 | பழனி மெயின் சாலை முதல் தும்மிச்சம்பட்டி புதூர் வரை |
| 3 | திடீர் நகர் மெயின் சாலை முதல் காவேரி நகர் வரை |

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுமக்கள் நலன் மற்றும் போக்குவரத்து அவசியம் கருதி, தெரு மின்விளக்கு வசதி ஏற்படுத்தும் பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்.173</u>**

1. அனுமதிக்கப்பட்டது.
2. மேற்படி பணிகளில் கூடுதலாக மேட்டுப்பட்டி தெற்கு தெரு பகுதியில் புதிய மின்கம்பங்களுடன் கூடிய தெருமின் விளக்குகள் அமைக்கும் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 25**

இந்நகராட்சி 18-வது வார்டு ஏ.எம்.கே நகர் மற்றும் கருப்பணபுரம் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள பாலங்கள் சிதலமடைந்துள்ளதால், அப்பகுதிகளில் உள்ள இரண்டு பாலங்களை மாற்றி புதிய பாலங்கள் அமைக்கும் பணிக்கு நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து நலன் கருதி, பாலம் அமைக்கும் பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 174**

1. அனுமதிக்கப்பட்டது.
2. மேற்படி பணிக்கான கூடுதல் செலவினம் ரூ.50,000/- ஏற்று மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 26**

இந்நகராட்சி 9-வது வார்டு தும்மிச்சம்பட்டி ஐந்து பைப் தெரு வடக்கு பகுதியில் அமைந்துள்ள ஆழ்குழாய் மின் மோட்டார் பொருத்தி பொதுமக்கள் பயன்பாட்டிற்காக சின்டெக்ஸ் டேங்க் அமைக்கும் பணி மற்றும் கிழக்கு மற்றும் மேற்கு தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் முதலான பணிகளுக்கு நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து நலன் கருதி, மேக்காணும் பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 175**

1. அனுமதிக்கப்பட்டது.
2. மேற்படி பணிக்கான கூடுதல் செலவினம் ரூ.6.70 இலட்சம் மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 27**

இந்நகராட்சி நகர்மன்ற தலைவர் அவர்களின் பயன்பாட்டிற்காக புதியதாக ஸ்கார்ப்பியோ வாகனம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்திற்கான ஆயுள் காப்பீடு, பதிவு செய்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால், அப்பணிகளுக்கான உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி புதிய ஸ்கார்ப்பியோ வாகனத்திற்கான செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 176**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்</u>** : 28

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு எதிராக டி.மு.நீதிமன்றம், சார்பு நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்ற ஆகியவற்றில் தொடரப்படும் வழக்குகளில், இந்நகராட்சி சார்பில் நீதிமன்றங்களில் ஆஜராகி வழக்குகளை நடத்திட நிலை வழக்கறிஞர் ஒருவரை நியமனம் செய்துகொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>**

இந்நகராட்சி மீது டி.மு.நீதிமன்றம், சார்பு நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களில் நடைபெறும் வழக்குகளுக்கு, இந்நகராட்சி சார்பாக ஆஜராகவும், மேற்படி நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளை முடிவுக்கு கொண்டுவர கோப்புகளை வழங்கவும், இனி வரும் காலங்களில் மேற்காணும் நீதிமன்றங்களில் இந்நகராட்சிக்கு எதிராக தாக்கலாகும் வழக்குகளில் திரு.ப.மகேந்திரன், அவர்களை நிலை வழக்கறிஞராக ஆஜராக மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்.177</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்</u>** : 29

இந்நகராட்சி 16-வது வார்டு உள்ள சாஸ்தா நகர் தோட்டத்து சாலையில் இரயில்வே கேட் முதல் பூமிதான வாரிய நிலம் வரை உள்ள (கிழக்கு) சாலையினை நில அளவை செய்து மரம், செடி, கொடிகளை அப்புறப்படுத்தி மேடு, பள்ளங்களை சமன் செய்து சாலை உருவாக்கும் பொருட்டு, பணிகள் மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.90 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பகுதி பொதுமக்கள் மற்றும் விவசாயிகளின் நலன் கருதி, மேற்படி பூமிதான நிலம் வரை உள்ள சாலையினை சரிசெய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்.178</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்</u>** : 30

இந்நகராட்சி 16-வது வார்டு உள்ள சாஸ்தா நகர் தோட்டத்து சாலையில் இரயில்வே கேட் முதல் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரம் வரை உள்ள (மேற்கு) சாலையினை நில அளவை செய்து மரம், செடி, கொடிகளை அப்புறப்படுத்தி மேடு, பள்ளங்களை சமன் செய்து சாலை உருவாக்கும் பொருட்டு, பணிகள் மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.90 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பகுதி பொதுமக்கள் மற்றும் விவசாயிகளின் நலன் கருதி, மேற்படி பூமிதான நிலம் வரை உள்ள சாலையினை சரிசெய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்.179</u>**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 31**

இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவு மூலம் செஸ் ஒலிம்பியாட் போட்டி தமிழகத்தில் மாமல்லபுரத்தில் 188 நாடுகள் பங்குபெறும் உலக சதுரங்க விளையாட்டு போட்டி நடைபெறவுள்ளதை முன்னிட்டு, மேற்படி போட்டியின் விவரத்தினை பொதுமக்கள் அறியும் வண்ணமாக வரும் 20.07.2022 முதல் 25.08.2022 வரையிலான காலத்திற்கு இந்நகராட்சி மூலம் விழிப்புணர்வு பதாகைகள் (Flex Board) 10 x 10 என்ற அளவில் 4 எண்ணிக்கையிலான பதாகைகள் இந்நகராட்சி பொதுமக்கள கூடும் இடங்களில் நிறுவுவதற்கு ஆகும் செலவினம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி செஸ் ஒலிமியாட் போட்டி தமிழகத்தில் நடைபெறுவதை பொதுமக்கள் அறியும் வண்ணம் பிளக்ஸ் போர்டுகள் அமைப்பதற்கு, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, மேற்படி பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 180**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 32**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் கடித ந.க.எண்.1409/2022/அ1, நாள்.27.04.2022-இன்படி, இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவு மூலம் நெகிழி (Plastic) உபயோகிப்பதை தவிர்த்து பொதுமக்கள் மீண்டும் மஞ்சப்பை உபயோகப்படுத்த வழியுறுத்தி, பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக விழிப்புணர்வு செய்யும் பணிகள் கீழ்கண்டவாறு,

| வ.எண் | பொருட்கள் | எண்ணம் |
|---|---|---|
| 1 | மல்டி கலர் கோடட் நோட்டீஸ் ஸ்டிக்கர் | 10000 |
| 2 | கொரோனா விழிப்புணர்வு குறித்த முககவசம் கட்டாயம் மல்டி கல் ஸ்டிக்கர் | 10000 |
| 3 | மீண்டும் மஞ்கள் பை பயன்படுத்துவது தொடர்பான மல்டி கலர் நோட்டீஸ் | 10000 |

மேற்கண்ட மூன்று இனங்களுக்கான ஸ்டிக்கர் மற்றும் நோட்டீஸ் கொள்முதல் செய்யும் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.4.50 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதாரம் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் ஸ்டிக்கர் மற்றும் நோட்டீஸ் கொள்முதல் செய்துகொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 181**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 33**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 7-வது வார்டு நாயக்கனூர் பகுதிக்கு போர்வெல் மேல்நிலைத் தொட்டி அமைக்கும் பணிக்கு தொகை ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 15.06.2022-இல் நகர்மன்ற தலைவர் அவர்களால் முன்அனுமுதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்காக 30.06.2022-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு,

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.எம்.முத்துக்கண்ணன் | 4.97 % மதிப்பீட்டு விலையில் கூடுதல் |
| 2 | திரு.ஹச்.முகமதுரஸ்மி | 8.24 % மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களிடமிருந்து டேவணித் தொகை வரப்பெற்ற நிலையில் , மேற்படி பணிக்கு திரு .எம்.முத்துக்கண்ணன் ஒப்பந்ததாரரின் 4.97% மதிப்பீட்டு விலை விகிதத்தில் கூடுதலாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசியம் கருதி, மதிப்பீட்டு விலையில் 4.97% கூடுதலான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.முத்துக்கண்ணன் ஒப்பந்ததார ர் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்தை ஏற்று, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.182**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 34**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பழனி சாலையில் உள்ள மயானம் சீர் செய்து சுற்றுச்சுவர் அமைத்து பராமரிக்கும் பணிக்கு தொகை ரூ.9.95 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 15.06.2022-இல் நகர்மன்ற தலைவர் அவர்களால் முன்அனுமுதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்காக 30.06.2022-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு,

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.எம்.முத்துக்கண்ணன் | 0.03 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு. ஹச்.முகமது ரஸ்மி | 4.76 % மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களிடமிருந்து டேவணித் தொகை வரப்பெற்ற நிலையில் , மேற்படி பணிக்கு திரு .எம்.முத்துக்கண்ணன் ஒப்பந்ததாரரின் 0.03% மதிப்பீட்டு விலை விகிதத்தில் குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசியம் கருதி, மதிப்பீட்டு விலையில் 0.03% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.முத்துக்கண்ணன் ஒப்பந்ததார ர் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்தை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.183**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 35**

அரசாணை எண்.172, சுற்றுலா, கலை பண்பாடு மற்றும் அறநிலைய துறை, நாள்.14.07.2022 –இல் 75-வது வருட சுதந்திர திருநாள் அமுதம் பெரு விழாவினை சிறப்பாக கொண்டாடும் பொருட்டு, ஆகஸ்ட் 11 முதல் 17 ஆம் தேதி வரை சுதந்திர வாரமாக கொண்டாடவும் மற்றும் நகர் பகுதியில் உள்ள அனைத்து வீடுகளிலும் தேசிய கொடி ஏற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி 75-வது சுதந்திர திருநாள் அமுதம் பெருவிழாவினை சிறப்பாக கொண்டடும் விதமாக திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் 18.07.2022 ஆம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு சிறப்பாக கொண்டாடும் வகையில், இந்நகராட்சி அலுவலகம் முகப்பு, நகர்புற சுகாதார நிலையம் மற்றும் வணிக வளாக பகுதிகளில் வர்ணம் பூசும் பணிகள் மேற்கொள்ளவும், அலுவலக வளாகத்தில் பொருத்தப்பட்டுள்ள தமிழ் வாழ்க பெயர் பலகை பழுதடைந்துள்ளதை பழுது நீக்கம் செய்தல் முதலான பணிகளுக்கு ஆகும் உத்தேச செலவினம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. 75 வது சுதந்திர திருநாள் அமுத பெருவிழாவினை சிறப்பாக கொண்டாட வேண்டியதின் அவசியம் கருதி, மேற்படி பணிகள் மேற்கொள்ள மன்றம் அனமதிக்கலாம்.

**தீர்மான எண். 184**

1. அனுமதிக்கப்பட்டது.
2. மேற்காணும் பணி மேற்கொள்ள ரூ.1.70 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்க தீர்மானிக்கப்பட்டது. மேலும் பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி பணிகளை திரு.எம்.முத்துக்கண்ணன் ஒப்பந்ததாரர் வசம் ஒப்படைத்து மதிப்பீட்டு விலையில் பணி செய்திட அனுமதிக்கப்பட்டது.

ஓம்/-க.திருமலைசாமி,
நகர்மன்ற தலைவர்,
ஒட்டன்சத்திரம் நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்,
ஒட்டன்சத்திரம் நகராட்சி